DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2020 Station Thally PS

| Name | Lw21 /Pw 7/ Siva Raj/SI of Police | Village | |
|---|---|---|---|
| Father Name | Periyannan | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**23.09.2025.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் உட்கோட்டம் மத்திகிரி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.08.2020 ம் தேதி இரவு சுமார் 22.30 மணிக்கு நான் தளி காவல் நிலையத்தில் காவல் நிலைய அலுவலில் இருந்தபோது தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று GD யில் பதிவு செய்து விட்டு என்னுடைய காவல் அதிகாரிகளுக்கு தகவல் அறிவித்து விட்டு தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், படிகநாளம் அஞ்சல், முதுகேரிதொட்டி கிராமத்தை சேர்ந்த உள்ளீரப்பா மகன் ருத்திரப்பா என்பவரை விசாரித்து அவர்க கொடுத்த வாக்குமூலத்தை பெற்று 29.08.2020 ம் தேதி காலை 11 மணிக்கு தளி காவல் நிலையம் சென்று ருத்திரப்பன் வாக்குமூலத்தின் பேரில் தளி காவல் நிலைய குற்ற எண்.523/2020 சட்டபிரிவு 307 இ.த.ச. மற்றும் 27 (1) Arms Act ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், ருத்திரப்பாவின் அசல் வாக்குமூலம் இரண்டையும் இணைத்து கணம் குற்றவில் நீதித்துறை நடுவர் தேன்கனிக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும் FIR ன் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்ய FIR ன் நகல் ஒன்றை தேன்கனிக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக தேன்கனிகோட்டை வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் மருத்துவமனையில் பெற்று வந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.10** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

எந்த தேதியில் நான் மருத்துவமனை சென்று வாக்குமூலம் பெற்றேன் என்றால் 28.08.2020 அன்று 23.15 மணிக்கு வாக்குமூலம் பெற்றேன். நான் மருத்துவமனை சென்று விசாரணை செய்யவில்லை என்றும் நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.